கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம் /புவியியற்துறை

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

~~2009/2010~~ (2015 March)
2011/2012

GEOS 4102:பிரதேச அபிவிருத்தியும் திட்டமிடலும்
(Regional Development & Planning)

நேரம் 03 மணித்தியாலங்கள்

LIBRARY 11 MAY 2015 SRI LANKA

* ஒவ்வொரு பகுதிலுமிருந்து இவ்விரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு(04) வினாக்களுக்கு விடை தருக.
* எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி -1

(01) a. அபிவிருத்தி எனும் பதத்தினை வரையறை செய்க.
(5 புள்ளிகள்)

b. பிரதேசரீதியாக அபிவிருத்திச் சமமின்மை காணப்படுவதற்கான காரணங்களை உலக நாடுகளை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.
(20 புள்ளிகள்)

(02) a. கடந்த இரு தசாப்தங்களாக பிரதேச அபிவிருத்தித் திட்டமிடல் ஏனைய அபிவிருத்தித் திட்டமிடல் முறைகளைவிட முக்கியத்துவம் பெற்றுள்ளமைக்கான காரணங்கள் யாவை?
(10 புள்ளிகள்)

b. பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு கைக்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத் தத்துவங்களை விளக்குக.
(15 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை தருக.
a. குறைவிருத்தியின் பிரதான பண்புகள்.
b. செயற்திட்ட வளையம்.
c. மத்திம இடக்கோட்பாடும் பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலும்
(12.5x2= 25 புள்ளிகள்)

# பகுதி -11

(04) வளர்முக நாடுகளின் பிரதேசங்களைத் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்வதற்கு வளர்ச்சிமுனைக்கோட்பாடு எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதனை நாடுகளை உதாரணங் காட்டி விளக்குக.

(25 புள்ளிகள்)

(05) இலங்கையில் 1970 களுக்குப்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரதேச அபிவிருத்தித் திட்டங்களைக் குறிப்பிட்டு பிரதேசரீதியான அபிவிருத்திச் சமமின்மையைக் குறைப்பதற்கு ஆற்று வடிநில அபிவிருத்தித் திட்டம் எந்தளவு பங்களிப்பு செய்துள்ளது என்பதனைப் பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)

(06) இந்தியாவில் பிரதேச ரீதியான அபிவிருத்திச் சமமின்மை ஏற்படுவதற்கு வழி வகுத்த காரணிகளைக் குறிப்பிட்டு பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு இங்கு பின்பற்றப்பட்ட உபாயங்களையும் நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

(25 புள்ளிகள்)